**வறுமை, மோதல் மற்றும் கல்வி: இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலான பாடசாலைகளின் ஓர் ஆய்வு**

சுவர்ணா ஜயவீர, சந்திரா குணவர்தன
CENWOR

**சுருக்கம்**

இவ்வாய்வு மோதலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள், மோதல் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள், ஒரு பெருந்தோட்டத்துறை மாவட்டம், ஒரு சமூக பொருளாதார மற்றும் கல்வியால் பயனடையாத மாவட்டம், பெருமளவு கிராமப்புற மாவட்டம் மற்றும் கொழும்பு மாவட்டம் உட்பட்ட எட்டு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. இது இம்மாவட்டங்களில் பெருமளவு நிலவுகின்ற சூழ்நிலைக் காரணிகளி தொடர்பாக கல்வியைப் பெற்றுக் கொள்ளும் வழியிலான பிரச்சினைகள் மற்றும் கல்வியின் தரம் தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்கின்றது.

இதன் கண்டறிவுகள் வறுமையின் பல்வேறு பரிமாணங்களின் இடையிலான தாக்கஙிகளிலான முன்னைய ஆய்வுகளை உறுதி செய்துள்ளன. இலங்கையில் கல்வி உரிமைக்கான அர்ப்பணிப்பு மற்றும் கடந்த ஆறு தசாப்தங்களாக சமூக சமத்துவம், மேல்நோக்கிய சமூக பொருளாதார நிலை என்பவற்றை முன்னேற்றுவதில் கல்வியின் பங்கு என்பன பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடொன்றின் குடித்தொகையின் கணிசமான பிரிவினர் கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதை அதிகரிக்கச் செய்துள்ளது.

இதே நேரம் கல்வி சர்வமயமாக்கப்படலிற்கான ஒரு பிரதான தடையாக வறுமையின் நிலவுகை ஆய்வுகளில் காட்டப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முன்னர் கல்வி உரிமையை அனுபவித்துக்கொண்டிருந்த பல இளைஞர்களின் முறைசார் கல்விக்கான வழிகளை மறுத்துள்ளவையாக சுனாமி மற்றும் ஆயுதமேந்திய மோதல்களின் தாக்கங்கள்கள் நோக்கப்படுகின்றன. இருந்தாலும் எல்லா இடங்களிலும் பாடசாலை செல்லாமைக்கான பிரதான காரணமாக வறுமையே கொள்ளப்படுகின்றன. இதே நேரம் பாசடாலைகள் மூடப்பட்டுள்ள காலப்பகுதியில் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் முறைசாரா அமைப்புக்கள், பாடசாலைக்கான வருகைச் செயற்குழுக்களின் உயிர்ப்பு, பிரதியீட்டுக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், பாடசாலை மதிய உணவு நிழ்ச்சித்திட்டங்களின் வழங்கள் பேன்ற ஆதரிக்கும் செயற்பாடுகள்,அதே போல் சாதாரண நிலைமைக்கு மீள்வதற்கு சமுதாயங்களினது மீளும் தன்மை ஊக்கமளித்தல் என்பன இந்நெருக்கடி சூழ்நிலையின் இன்னும் சீர்கெடச்செய்வதை எதிர்க்கும் சக்திகளாகும். வரலாற்று ரீதியாக பின்னடைவுகளை அனுபவிக்கின்ற மொனராகலை மாவட்டம், பெருந்தோட்டத்றை மாவட்டம் மற்றும் கொழும்பின் குறைந்த வருமானம் பெறும் அயற்கிராமங்கள் தொடர்ந்தும் வறுமை மற்றும் கல்வி தொடர்பாக பலவீனமான நிலையிலேயே உள்ளன.

இச்சூழ்நிலைக் காரணிகள் பாடசாலைகளில் வளங்கள் கையளிக்கப்படுவதையும் பாதிப்பதாக காணப்படுகின்றது. பெரும்பாலும் எல்லா பாடசாலைகளும் போல் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற போதுமானளவு பாடப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியவையாக இருப்பதுடன் பாதுகாப்பான நீர், பிரத்தியேகமான மலசல கூடங்கள் மற்றும் மின்சாரம் போன்ற அத்தியவசிய வசதிகள் 10 முதல் 15 ஆன பாடசாலைகளிலேயே உள்ளன. கொழும்பு மாவட்டத்திற்கும் நுவரெலியா, யாழ்ப்பாணம், மொனராகலை, அம்பாறை, வவுனியா போன்ற வசதி குறைந்த மாவட்டங்களின் பாடசாலைகளிடையிலும், மேலும் சலுகை பெற்ற மற்றும் வசதி குறைந்த பாடசாலைகளிடையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமுதாயங்கள், சுனாமி மற்றும் யுத்தத்தினால் சமுதாயங்களின் பல பாடசாலைகளிற்கு உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கான தேவை உள்ளது.

ஆசிரியர்களின் வரவிலான குறைவு, சிறுவர்களின் மீது பிரயோகிக்கப்படுகின்ற பலமான தண்டனைகள் மற்றும் கற்பித்தலில் பங்குபற்றல் முறைகளின்மை என்பன கல்வியின் தரத்தினை எதிரிடையாகப் பாதித்துள்ளது அதே வேளை ஆசிரியர்களைப் பரவலாக சேவையில் அமர்த்துவதிலும் கூட வேற்றுமைகள் காணப்படுகின்றன. இவ்வேற்றுமைகள் மாணவர்களின் தேர்ச்சிகளைப் பாதிப்பனவாக காணப்படுகின்றன.

ஏறத்தாழ அரைவாசியான பாடசாலைகள் மிகவும் குறைந்த அல்லது குறைந்த தேர்ச்சிகளையே புலமைப் பரிசில் பரீட்சையில் கொண்டிருந்ததுடன உயர் தேர்ச்சிகளுடனான எட்டு பாடசாலைகளில் ஏழு நகர்புறப் பிரதேசங்களிலிருந்தும் எட்டாவது மோதல் பிரதேசமொன்றிலிருந்தும் காணப்பட்டன. இவ்வாய்வு மாணவர் தேர்ச்சி, வறுமை மற்றும் சமுதாய வகையிடையிலான ஒரு தெளிவான தெடர்பினைச் சுட்டிக்காட்டியது. அதிபர்களும் ஆசிரியர்களும் வீட்டு, தனிப்பட்ட பிரச்சினைகளையே மாணவர் தேர்ச்சியைப்பாதிக்கும் காரணிகளாக அடையாளம் கண்டுள்ள அதே நேரம் பெற்றோர்கள், வசதி குறைவு, ஆசிரியர் பற்றாக்குறை, குறைந்த தரக்கற்பித்தல் மற்றும் அக்கறையின்மை போன்ற பாடசாலை தொடர்பான காரணிகள், அதே போல் மோதல், சுனாமி காரணமான இடம்பெயர்வு போன்ற சூழ்நிலைக் காரணிகளையும் சுட்டிக்காட்டுகின்றனர்.